www.padippakam.com

333

# அரும்பு

# ARUMPU

மலர் 10

ஆசிரியர்:
அருண்

சித்திரை
வெளியீடு
1995




படிப்பகம்

www.padippakam.com

# அரும்பு

# ARUMPU

மலர் 10

ஆசிரியர்:
அருண்

சித்திரை
வெளியீடு
1995

## உள்ளே...

1. ஆசிரியர் பேனாவிலிருந்து..........
2. அமைதிப்புறா..................................
3. சமந்தி...........................................
4. பிரேமன் நகரத்து இசைக்குழு...
5. அந்தரத்தில் நிரந்தரங்கள்..........
6. எய்ட்ஸ் பயம் வேண்டாம்...........
7. புகழ்..............................................
8. ஜனநாயகம்....................................
9. சமையல் குறிப்பு..........................
10. சோதிடமும் மனிதவாழ்வும்..........
11. சிறுவர் பூங்கா..............................

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய இறுதிதிகதி 01-06-1995

தொடர்புகளுக்கு: S.Sivagnanam
Axelborg 7B, 2th
8700 Horsens
Denmark
Tlf: 75 612564

ஆக்கங்களை பரிசீலனை செய்யும் உரிமை ஆசிரிருக்குண்டு.

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் பேனாவிலிருந்து...

என் இனிய நெஞ்சங்களே!

அழகாக அரும்பி பெரிய விருட்சமாக வளரும் என எதிர்பார்த்த அரும்பு.....
இரு ஆண்டுகள் நீர், உரம் இல்லாது சோர்ந்து போய்க்கிடந்தது.
இப்போது மீண்டும் அரும்பு.....
இலை உதிர்த்து விட்டு கூதல் குளிக்கத் தயாராக இருந்த இந்த துருவப் பிரதேசத்து மரங்களெல்லாம் இம்முறை, கால மாற்ற எச்சரிக்கை பெற்று மீண்டும் அரும்பு கட்டி நிற்பது போல.....
முன்பு உங்களைத் தேடி வந்த அரும்பு இப்போது மீண்டும் தலை காட்டும் போது அதன் மீது கொண்ட பாசத்தின் காரணமாக பசுமையான எண்ணங்களோடு மீண்டும் அதனை அணுகப்போகிறீர்கள்.உங்கள் எதிர்பார்ப்புகள் இனி மேலும் வீண்போகாது.

அரும்பு இனிமேல் முற்றித் திரண்ட கரும்பு!
உண்மை வெறும் புகழ்ச்சி அல்ல.

ஆ...ர்


## புது வருட வாழ்த்துக்கள்!

சித்திரை வருடம் இன்று
சிறப்புடன் அணிகள் சேர!
புத்துணர்வோடு மக்கள்
புதியதோர் உணர்வு காண
சத்திய நெறிகள் காக்கும்
சித்திரைப் பெருநாள் என்று
நித்தமும் மகிழ்ச்சி கொள்ள
நிறைவுடன் வருக ஆண்டே.



படிப்பகம்

www.padippakam.com



## அமைதிப்புறா

நிரப்ப
ஏது மில்லாத
வெற்றுத்தாள்
வெள்ளையாய்ச்
சிரித்தது.
உலகில்
பிரச்சினைகள்
இல்லையேல்
செய்திதான்
ஏது!
அவனைப்
பொறுத்த வரை
காதலும்
அறிவும்
களத்துக்குத்
தேவையற்றவை

இன்று
அவனது
வார்த்தைகளே
"உலகம்
சுகமாக
உறங்கட்டும்"
அன்று, அவனுக்கு
பிரச்சினைகளே
சோறு போட்டன.
இன்று
உலகம்
அமைதியாய்
உறங்கத்
தாயாராகிறது.
இனி
அவனது
பத்திரிகைக்கு
மூடுவிழாத்தான்

–ஜெயன்.–

## மனிதன்

மனிதன்
அவசரக்காரன்
அதனால்தான்
அவன் மாங்காயைப்
பழுக்கவிடாது
கல்லால்
அடித்துப்
பிஞ்சிலேயே
சாப்பாட்டு
விடுகிறான்.

–லெனின்–



படிப்பகம்

www.padippakam.com

# சமந்தி

கடந்த இரு நாட்களாக பெய்த மழை வெள்ளம் மலை முகடுகளிலிருந்து சல சலத்து ஓடி வந்து சிறிய தொட்டிகளை மேவிப்பாய்ந்து கொண்டிருந்தது.
பொன் ஒளியை அள்ளி பூமா தேவி மீது தெளித்துக் கொண்டு உதய சூரியன் வருவதற்கு தயாராகிக் கொண்டிருந்தான்.
எங்கும் பனி மூட்டம். மலை முகடுகள் அனைத்தும் வெள்ளை வெளேரனக் காட்சி தந்து கொண்டிருந்தன. சிட்டுக் குருவிகளும், சோலைக் குருவிகளும் அதிகாலையிலேயே அமர்க்களப்பட்டு தங்கள் இனிய குரல்களால் பாடிக் கொண்டிருந்தன.

இத் தோட்டத்தின் நடுவே ஒரு சிறிய தமிழ் கலவன் பாடசாலை இருக்கிறது. இப் பாடசாலையில் ஒரு தமிழ் ஆசிரியர் மட்டும் படிப்பித்துக் கொண்டிருந்தார். சுமாராக முப்பது பிள்ளைகள் வரை இப்பாடசாலையில் படிக்கிறார்கள். தினமும் முப்பது பிள்ளைகளும் பாடசாலைக்கு வராவிட்டாலும் பத்து பிள்ளைகளாவது வருவார்கள். சில நேரம் ஓரிரு பிள்ளைகளும் வருவதுண்டு.

அப்படி வரும் பிள்ளைகள் ஆசிரியருக்கு பணிவிடை செய்வார்கள். படித்தாலும் படியாது விட்டாலும் ஆசிரியர் அவர்கள் மீது கோபப்படமாட்டார். பாடசாலை முடிந்ததும் மாணவர்கள் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போய் விடுவார்கள்.

இந்த நிலையில் அந்த பாடசாலை ஆசிரியருக்கு ஒரு நாள் இடமாற்றம் வந்தது. பிள்ளைகளும் அவர்களது பெற்றோர்களும் அவருக்கு பிரியாவிடை கொடுத்து அனுப்பி வைத்தனர்.

இந்த பாடசாலைக்கு புதிய ஆசிரியராக வந்திருப்பவர் சிவராமன். இவர் யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்றிலிருந்து இடமாற்றம் பெற்று இப் பாடசாலைக்கு வந்திருக்கிறார். இப்பாடசலைப்பொறுப்புகளை ஏற்றுக் கொள்தற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே மலையகப் பாடசாலைக்கு வந்து விட்டார். பழைய ஆசிரியர் இருந்த அறையிலேயே அவர் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு இருந்தன.
இந்த மூன்று நாட்களுக்கிடையில் அந்தப் பாடசாலையைச் சுற்றியுள்ள மலைப் பிரதேசத்தை பார்த்து விட்டான் சிவராமன். தேயிலைத் தோட்டமும் வனப்பு மிகு இறப்பர் தோட்டமும் அவருக்கு என்றுமில்லாத ஒரு வித மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தன.

மறுநாள் பாடசாலை தொடங்கியது. அன்று பாடசாலைக்கு குறைவாகவே பிள்ளைகள் வந்திருந்தார்கள். மற்றப் பிள்ளைகள் வராத காரணத்தையும் வந்த பிள்ளைகளிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

அன்று முதல் நாள் என்பதால் பகல் பதினொரு மணிக்கே பாடசாலையை முடித்தான் சிவராமன். அன்று மாலை பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் வீட்டைத் தேடிச் சென்று பெற்றோர்களிடம் மாணவர்களின் கல்வி சம்பந்தமாகவும் ஒழுங்கு பற்றியும் எடுத்துக்கூறி அவர்கள் கொடுத்த தேனீரையும் பலகாரத்தையும் சாப்பிட்டு அவர்களின் அன்பையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த சிவராமனை அதிகாலை ஐந்து மணிக்கு ஒரு சிங்களப் பக்திப் பாடல் துயிலெழுப்பியது. "புத்தம் சரணம் கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி" என்ற பக்தி பாடல் அது. இப் பாடலை இலங்கை வானொலியில் பல தடவைகள் பௌத்த நற்சிந்தனையில் கேட்டிருக்கின்றான்.

சிறிது நேரத்தில் பொழுது புலர்ந்தது. அலுப்பு முறித்துக் கொண்டு யன்னலூடாக பாடல் வந்த எதிர் வீட்டுப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.
ஒரு அழகிய இளம் பெண் ஒரு காலை நொண்டிக் கொண்டு வெளியில் வந்து நந்தியாவர்த்தம் பூக்களைப்பறித்து ஒரு அழகிய தட்டில் வைப்பதையும் கண்டான். அவளது அழகில் மனதைப் பறிகொடுத்தவனாக ஏதோ சிந்தனையில் இருப்பவன் போல இருந்தான். மறு நாள் பாடசாலை முடிந்ததும் மாணவர்களிடம் அவளது பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அவளது பெயர் சமந்தி, அவள் எவ்வளவு அழகானவள், அந்த அழகியிடம் இறைவனுக்கு ஏன் இந்த வஞ்சனை. மீண்டும் அவளது பெயரை உச்சரித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தான். "மாஸ்ரர்" என்ற படி அப் பெண் அழகிய தாமரைப் பூக்களையும் பழங்களையும் கையில் வைத்திருப்பதைப் பார்த்தான்.

"மாஸ்ரர், இப் பழங்களைத் தங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்" எனத் தனக்குத் தெரிந்த கொச்சைத் தமிழில் கூறினாள். நல்லது எனக் கூறிக் கொண்டு தாமரைப்பூக்களையும் பழங்களையும் பெற்றுக் கொண்டான். அப்பொழுது அவளது மென்மையான கரங்கள் அவனது கரங்களில் உரசி அவனுக்கு என்றுமில்லாத ஒரு உணர்வையும் உள்ளத்தில் ஒரு பூரிப்பையும் ஏற்படுத்தியது. "புத்த பகவானின் பாதத்தில் வைத்து பூசிக்கப்பட்ட தாமரை மலர்களும் பழங்களும் இவை" எனக் கூறிவிட்டு மெதுவாக நடந்தாள். அந்த மலைச்சரிவுகளில் அவளையே பார்த்தபடி நின்றான் சிவராமன். மெல்லியபுன்னகை தவழும் அந்த சிங்களக் கன்னியின் நினைவுகள் அவன் மனத்திரையில் நிழலாடிக் கொண்டிருந்தது. சமந்தியும் அவனையே நினைத்துக் கொண்டிருந்தாள். மறுநாள் காலையில் எழுந்து அவன் புத்த பகவானைத் தரிசிக்க அவன் புத்த கோயிலுக்குப் போனான், சமந்தியும் அங்கே வந்திருந்தாள். இருவரும் புத்த பகவானை வணங்கினார்கள்.

கருணையே வடிவான புத்த பகவானை வழிபட்டு விட்டு இருவரும் வீட்டுக்கு வந்தனர். ஒரு கால் இல்லாத போதும் அவள் தடியூன்றி நடந்து வந்த காட்சி அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தது. சமந்தி சிவராமனின் நினைவாகவே இருந்தாள். மெதுவாக முற்றத்துக்கு வந்து சிவராமனை தன் வீட்டுக்கு அழைத்தாள். ஆனந்தம் பொங்கிட அவன் அவளது வீட்டுக்குச் சென்றான்.



படிப்பகம்

www.padippakam.com

தனது காதலை தனது தாய்மூலம் சிவராமனிடம் தெரியப்படுத்தினாள். மதிய உணவுக்கு தங்கள் வீட்டில் ஏற்பாடு செய்வதாகவும் கூறினாள். சிவராமனும் தனது காதலை வெளிப்படுத்தினான்.

தாய் சமையலைக் கவனிக்க இருவரும் நீண்டநேரம் கதைத்துக் கொண்டிருந்தனர். திடீரென யாரோ பலர் கதவில் தட்டும் சத்தம்கேட்டது. வெளியில் ஒரே கூச்சலாக இருந்தது. இனக் கலவரம் தொடங்கிவிட்டது. பலர் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். சமந்தியின் தாய் பயத்தால் நடுங்கினாள். சமந்தி சிவராமனை யன்னல் வழியாக வெளியேற்றி வைத்து அருகிலிருந்த வாழைத் தோட்டத்தினுள் கூடை ஒன்றினால் மூடினாள் பின் வெளியே வந்து கதவைத் திறந்தாள்.

பத்து அல்லது பதினொரு பேர் கையில் வாளோடும் கத்தியோடும் நின்றனர். "மாஸ்ரர்" எங்கே என்று கேட்டனர். அவள் மௌனமாகவே நின்றாள் மீண்டும் மீண்டும் கேட்டுப் பார்த்தனர். அவள் சொல்ல மறுக்கவே, "தமிழனோடு சோரம் போனவள்" என்று கூறிக்கொண்டு வெறி கொண்ட ஒருவன் அவளைக் கத்தியால் வெட்டினான். இரத்தம் பாய அவள் கீழே சாய்ந்தாள்.

சில நிமிட நேரத்தில் சிவராமன் கூட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்தான், சமந்தியின் அம்மா சமந்தியை மடியில் கிடத்தி வைத்துக் கொண்டு அழுவதையும், சமந்தி உயிரோடு போராடிக் கொண்டு துடிப்பதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தான். மாஸ்ரர், மாஸ்ரர் என மெதுவான குரலில் அவளது வாய் முணு முணுத்துக் கொண்டே அவளது உயிர் பிரிந்தது. சிவராமன் கதறி அழுதான். சமந்தி இனி என்னைப் பார்க்க வரமாட்டாள் ஐயோ! எனக்காகத்தான் தன் உயிரையே தந்து விட்டாளே! சமந்தி! சமந்தி! என நினைத்து அழுது கொண்டே இருந்தான் சிவராமன்.

சி.சிவஞானம்
கட்டுவன்.






படிப்பகம்

www.padippakam.com



# ஆசை........

எனக்கு ஒரு ஆசை
கவிதை
எழுதுதற்கு
கனக்கும்
என்
இதயத்தில்
ஒரு
அறிவிப்புப்
போடுங்கள்......
கவிதைக்குப்
பஞ்சமா?
எவன் சொன்னான்
பஞ்சமென்று!
வேலி அற்றுப்
போனதனால்
மேய்ச்சலுக்கு
வந்தவன்
நான்...
இலக்கணத்தை
எடுத்ததனால்
இலக்கியத்தைத்
தேடுகிறேன்......
தலைக்கனம்
என்றெண்ணாதீர்!
தவறுதலாய்ச்
சொல்வதனால்!
மனிதனுடன்
வாழ்ந்து
மனம் மாறிப்
போனதனால்
தனிமையிலே
நின்று தடுமாறிப்
போனவன் நான்...
கனக்கும் என்
எண்ணத்தை
கம்பனிடம்
சொல்லுதற்கு
எனக்கும்
ஒரு ஆசை
கவிதை
எழுதுதற்கு!
நாலுவரி
எழுதி நாராகக்
கோர்த்துவிட்டு
வாழும்
கவிஞருடன்
நிகராய் நிற்கிறேன்.....



படிப்பகம்

www.padippakam.com

தேளும்
பல்லிகளும்
குடியிருக்கும்
குடில் மீது
தாவிப் பறந்தேறி
கொக்கரிக்கும்
கோழியைப்போல்!
கூவும்
குயில்களையே
கொக்கரிக்க
அழைக்கிறேன்
பாழ்பட்ட
மனிதரெல்லாம்
படபடத்துக்
கை தட்ட
அரங்கேறி
நானும் என் சிறகை
அடிக்கிறேன்.
தூரிகை ஓவியத்தில்
மை சிந்தி
அழிவது போல்....
நாலு வரி கீறி
நரித்தனத்தைக்
காட்டுகிறேன்!

எனக்கு
ஒரு
ஆசை
கவிதை
எழுதுதற்கு!
கனக்கும்
என்
இதயத்தில்
ஒரு
அறிவிப்புப்
போடுங்கள்!

லெனின்–

நீங்கள் கற்றுத்தரும்
கல்வி ஒரு குழந்தையை
மகாத்மா ஆக்க
வேண்டுமென்பதில்லை
மனிதனாக்கினால்
போதும்.
–கால்வான்



படிப்பகம்

www.padippakam.com



1785, 1786, 1790 ம் ஆண்டில் பிறந்த கிறீம் சகோதரர்கள் ஜேர்மனில் வசித்து வந்தார்கள். மூத்த சகோதரர் யாக்கோப்புடன் இரண்டாவது சகோதரர் வில்கேம் சேர்ந்து பல்கலைக்கழகமொன்றில் மொழியாராய்ச்சி செய்து வந்தார். 1837ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் பங்குபற்றியதால் இருவரும் வேலையை இழந்தார்கள். மூன்றாவது சகோதரரோ ஓவியராக வேலைசெய்து வந்தார். பின்னர் இவர்கள் மூவரும் சேர்ந்து பல கதைகளை எழுதிவந்தார்கள். 'பிரேமன் நகரத்து இசைக்குழு' கதையும் இவர்கள் எழுதியவற்றில் ஒன்றே.

# பிரேமன் நகரத்து இசைக்குழு

## *தமிழில் எம்.சியா.*

ஓர் ஊரில் ஒரு மனிதன் வாழ்ந்துவந்தான். அவன் ஒருகழுதையை நீண்டகாலமாக வளர்த்து வந்தான். அந்தக்கழுதை அவனது பண்டகசாலையில் இருந்து பொதிகளை எடுத்துவர அவனுக்குப்பயன்பட்டது.

ஆண்டுகள் சென்றன... கழுதை பலம் குறைந்து கிழமாகிவிட்டது. அந்தக்கழுதையால் தனக்கு இனிமேல் பயனில்லையென்று கண்ட மனிதன், அந்தக்கழுதையைத் துரத்திவிட்டான்.

கழுதை மிகவும் தளர்ந்துபோய் வேறு ஊரைநோக்கிப்போய்க்கொண்டிருந்தது. என்னால் இனி எவருக்கும் பயனில்லை என்பது கழுதைக்கு வேதனை தந்தது. வேதனையுடன் சென்ற கழுதைக்கு தான் ஒரு இசைக்கலைஞன் ஆகினால் என்ன? என்ற எண்ணம் தோன்றியது. அப்போது அந்தவழியால் வந்த ஒரு நாய் முதுமையால் இளைத்து சோகமாய் காணப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கழுதை நாயிடம் உனக்கு என்ன நடந்தது என்று விசாரித்தது. நான் மேலும் மேலும் முதுமையடைந்து கொண்டேபோகிறேன். எனது எசமான் என்னைக்கொல்லுவதென்று தீர்மானித்துவிட்டான். முன்பெல்லாம் அவனது வேட்டைக்கு உதவியாகவிருந்தேன். இனிமேல் அவனுக்கு என்னால் ஒருவித பயனுமில்லை. அவனது கொலைத்தண்டனைக்குப் பயந்தே அவனுக்குத்தெரியாமல் இப்படி ஓடிவருகிறேன்". உடனே கழுதை நாயிடம் அப்படியானால் பிரேமன் நகரத்திற்கு வருகிறாயா? இருவரும் சேர்ந்து இசைக்கலைஞர் ஆகலாம் எனக்கேட்டது. இதற்கு உடன்பட்ட நாயும் கழுதையுடன் சேர்ந்து பயணத்தைத்தொடர்ந்து கொண்டிருக்கையில் வழியில் ஒரு பூனையை சந்தித்தன. அந்தப்பூனை கழுதையையும் நாயையும் பார்த்து நையாண்டி செய்தது. காரணத்தை வினாவியதற்கு பூனை தனக்கு வயது போய்விட்டதால், எலிபிடிக்கமுடியவில்லையென்றும், இதையறிந்த எஜமான் தன்னை நீரில் தாட்டு கொலைசெய்யவிருப்பதை தான் அறிந்தே ஓடி வருவதாகவும் கூறியது.

பின்னர் கூடவருவதாக சம்மதித்த பூனையும் கழுதையும் நாயும் சேர்ந்து பிரேமனை நோக்கிப்போய்க்கொண்டிருந்தன. வழியில் ஒரு சேவல் தென்பட்டது. மூன்று பிராணிகளும் சேவலிடம் ஏன் இப்படி பதறியபடி ஓடி வருகிறாய்? என கேட்டன.

அதற்கு சேவலும் தான் எஜமானுக்கு விசுவாசமாக காலநிலைகளை அறிவித்து வந்ததாகவும், வருகின்ற விடுமுறைக்கு வரவிருக்கும் விருந்தினர்களுக்கு தன்னை சூப் செய்து கொடுக்க எஜமான் தீர்மானித்திருப்பதை அறிந்தே தான் ஓடி வருவதாகவும் கூறியது. கழுதை, நாய், பூனை மூன்றும் சேவலின் குரலைப்புகழ்ந்து தம்முடன் இசைக்குழு அமைப்பதற்கு பிரேமன் வரும்படி கூறின. இதற்கு உடன்பட்ட சேவலும் அவைகளுடன் சேர்ந்து பிரேமனை நோக்கி பிரயாணத்தைதொடங்கியது.

நான்கு பிராணிகளும் பிரேமன் நகரத்தை நோக்கி போய்கொண்டிருக்கையில், திடீரென வானம் இருண்டது. இடிமின்னலுடன் காற்றும் சேர மழைபொழியத்தொடங்கியது. பிரேமன் நகரத்தை அன்று சென்றடைய முடியாது என்பதை அறிந்துகொண்ட பிராணிகள் அன்றிரவை அந்த காட்டில் கழிக்க தீர்மானித்தன.

கழுதையும் நாயும் ஒரு பெரியமரத்தடியில் படுத்துக்கொண்டன. பூனையோ மரத்தில் ஏறிப் படுத்துக்கொண்டது. சேவல் தனக்கு மர உச்சியில் படுத்தால் பாதுகாப்பெனகருதி மரஉச்சிக்கு ஏறிக்கொண்டது. படுக்குமுன் சேவல் நாற்புறமும் சுற்றிப்பார்த்தது. அப்போது சிறியவெளிச்சம் ஒன்று அதன் கண்ணுக்குத்தெரிந்தது.

–வளரும்



படிப்பகம்

www.padippakam.com

## கிராமப் புறக் கதைகள்

வெள்ளைக்காரன் இலங்கையை ஆட்சி செய்த போது வடபகுதிக்குப் புகையிரதப் பாதை திறக்கப்பட்டது. ஒரு தமிழர் புகையிரத நிலையக் காவலாளியாக வேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அதிகாரி ஒருவர் கொழும்புக்குப் புகையிரதத்தில் போகப் புறப்பட்டார். அதனை அறிந்த அந்த தமிழர் அதிகாரியிடம் சென்று "ஐயா நீங்கள் கொழும்புக்குப் போகக்கூடாது" என்று தடுத்தார். தான் ஒரு கனவு கண்டதாகவும் நீங்கள் கொழும்புக்குப் போகும் போது புகையிரதம் தடம்புரண்டு பலபேர் சாகக் கனவு கண்டதாக கூறினார்.

அதிகாரி அந்தக் கதையைக் கேட்டு தனது பயணத்தை நிறுத்தினார்.அந்தத் தமிழர் கூறியது போல புகையிரதம் தடம்புரண்டு பலபேர் இறந்து விட்டார்கள். இதனை அறிந்த அந்த வெள்ளைக்கார துரை அந்தக் காவலாளியைக் கூப்பிட்டு பத்தாயிரம் ரூபா கொடுத்து நன்றியும் தெரிவித்தார். பின் அந்த தமிழரை வேலையால் நீக்கினார், கடமை நேரத்தில் நித்திரை கொண்ட காரணத்திற்காக அவரை வேலை நீக்கம் செய்தார். தனது உயிரைக் காப்பாற்றிய காரணத்துக்காகவே அந்த பத்தாயிரம் ரூபாவையும் கொடுத்தார்.

–கிராமியன்–

# சித்திரைப் புத்தாண்டு!

இன்று போல என்றும் இன்ப வீட்டிலே – நாம்
ஒற்றுமையாய் வாழ்வோம் ஒரு கூட்டிலே
நன்று நன்று நன்று
புது வருடம் வந்ததின்று
இனிய பொங்கல் உண்டு
இனித்து வாழ்தல் நன்று,
மருத்து நீரைத் தலைக்கு வைக்க வேண்டுமே –தெய்வ
வணக்கத்தோடு தலை முழுக்கும் வேண்டுமே
பஞ்சாங்கம் நல்ல நேரம் கூறுமே –அந்த
பலன் வழி எம் பண்பாடு போகுமே.



படிப்பகம்

www.padippakam.com

# அந்தரத்தில் நிரந்தரங்கள்



வாத்துக்கள் வசைபாடி
வாழ்விடத்தை மாற்றுகையில்
வையமெலாம் வெதுவெதுப்பின்
வகைதேடி ஓடுகையில்
பூத்துக் குலுங்குகிற
புதுவசந்தம் எனநினைந்து
புதிதாக ஓரரும்பு
புறப்பட்டு நின்றதுவாம்.
ஆத்தாடி தாய்மரமோ
அலறித்துடித்ததுவாம்
அக்கணமே உறவுகளை
அவ்விடத்தே அறுத்ததுவாம்!
கூத்தாட தன்தோளைக்
கூதலிடம் கொடுத்ததுவாம்!
கூசாமல் முத்தமிட்டே
குடிவெறியால் மயங்கியதாம்.



கூதலனின் கொடுங்கோண்மை
கோலமதை மாற்றியதாம்
கொடுந்துயரால் தனிமரமோ
கோவென்று கதறியதாம்
ஆதவனைக் கரங்கூப்பி
அட்சரங்கள் ஓதியதாம்



படிப்பகம்

அழகான காலையிலே
அரும்புகளோ தோன்றியதாம்
பாதகனின் பிடிதளரப்
பகலவனை அணைத்ததுவாம்
பாசமெலாம் சொரிந்தே ஓர்
பசுமரமாய் நிமிர்ந்ததுவாம்
சாதகமாய் இயற்கையுடன்
தமை இணைத்து வாழ்க்கையிடும்
ஐரோப்பா வந்துவிட்டோம்.
வாழ்வியலில் ஈழவர் நாம்.

நிருவாணம் எய்திநின்ற
நெடுமரங்கள் துகிலுடுக்க
நிருவாணம் ஆகிவிடும்
மானிடர்கள் தேசமிதில்
புலவாணம் எனவேதாம்
புறப்பட்டு வந்தவர் நாம்!
கிஸ்கொடுக்கும் தெருக்களிலே
கூச்சமுடன் நடப்பவர் நாம்!
பண்பாட்டு அருவருப்பில்
புண்பட்டு தவிப்பவர் நாம்!
திண்டாட்ட வாழ்வமைத்து -எங்கள்
தேசத்தை நினைப்பவர் நாம் -அங்கே
கொண்டாட்டம் போலமைந்த
குளிர்காலக் கருக்கலிலே

www.padippakam.com

திருவெம்பாப் பாப்பாடி
தெருத்தெருவாய் நடந்தவர் நாம் -அங்கே
காதலிலும் கன்னியரைக்
கண்ணடிக்கும் வேளையிலும்
வேதத்தை இலக்கியத்தை
வீம்புக்கு அழைப்பவர் நாம்
கண்ணகியாய் சீதைகளாய்
கற்பியலில் வாழ்வமைக்க
எண்ணத் திரையமைத்து
எம் வாழ்வை ஏற்றவர்நாம்.

வேறு:
அங்கே மொட்டிட்டு
மலராவாள்!
முற்றிய ஓர் கனி கன்னி
கட்டிளம் காளையர்க்கோர்
காதலினால் வரும் சன்னி
கட்டுக் கட்டாகக்
கடிதக்கதை பண்ணி -காளை
தொட்டுச் சுகம் கொடுப்பான்
தொடரும் கதை பண்ணி...

கவிஞர்: பாரதிபாலன்.


## கைவிசளம்

15-4-95 சனிக்கிழமை காலை 05:45மணி முதல் 06:15 வரையில் கைவிசளம் கொடுக்கவும் வாங்கவும் ஆன சுபநேரம்!



படிப்பகம்

www.padippakam.com



# எய்ட்ஸ் பயம் வேண்டாம்

இன்று உலகத்தைத் துயரத்தில் ஆழ்த்திவருவது எய்ட்ஸ் என்னும் பயங்கர நோய். வல்லரசுகளுக்கே சவாலாகிப் போன இந்த நோயினால் பலர் மாண்டு விட்டனர். பலர் மரண பயத்தோடு வாழ்கிறார்கள்.

உலக யுத்தங்கள் முதலாக பல தகவல்களை முன்கூட்டியே தந்த 'நொஸ்ரடாம்' என்ற பிரான்ஸ் நாட்டின் சோதிடன், உலகத்தில் பல உயிர்களைக் குடித்தும் கண்டு பிடிக்கப்படாமல் இருந்த ஒரு பயங்கர நோய்க்கான மருந்து இந்தக் காலப் பகுதியிலேயே கண்டு பிடிக்கப்படும் என்று சோதிடமும் உரைத்து சென்று இருக்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

அவனது சோதிடப் பிரகாரம் சீனர்களின் புதிய கண்டு பிடிப்பு ஒன்று எய்ட்ஸ் நோயாளிகளுக்கு புத்துயிர் வழங்கி இருக்கிறது. தமிழர்களின் பழைய சித்த மருத்துவ முறைகளைப்போலப் பண்டைய சீனர்களிடமும் மருத்துவ முறைகள் இருந்தன. சீனர்களின் இந்த பழைய வைத்திய முறையில் இருந்து பெறப்பட்ட புதிய கண்டு பிடிப்பு ஒன்றே எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தப் புறப்படுகிறது. தமிழர்களின் சித்த மருத்துவத்தில் மாட்டில் இருந்து பெறப்படும் கோரோசனை முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதே போல் சீனர்களின் மருத்துவத்திலும் மாட்டில் இருந்து பெறப்படும் ஒரு வகை வஸ்து தீராத நோய்களைத் தீர்த்து வைக்கிறது.அது மாட்டின் பித்தப்பையில் இருந்து பெறப்படுகிறது. அதுவே இன்று எய்ட்ஸ் நோய்க்கான மருத்துவத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப் படுகின்றது. இதற்காக சீனா இன்று உலக நாடுகளில் இருந்து அதிக விலை கொடுத்து மாட்டின் பித்தப்பை வஸ்துவை இறக்குமதி செய்கிறது.

சீனர்களின் எய்ட்ஸ் நோய்க்கான பரீட்ச்சார்த்தம் வெற்றியளித்துள்ள அதே வேளை, தமிழகத்தின் பழைய சித்த மருத்துவர்கள் தமது ஆய்வை முடுக்கி விடுகிறார்கள். எய்ட்ஸ் நோய் தீர தங்க பஸ்ப்பம் என்னும் இந்திய விளம்பரங்கள் அமெரிக்காவைக் கவராமலா போகும்.

–சித்தர்–



# பைத்தியம்

வின்சன் சேர்ச்சில் ஒரு முறை பைத்தியக்கார ஆஸ்பத்திரியை பார்வையிடச் சென்றார். ஆஸ்பத்திரியில் உள்ள ஊழியர்கள் அவரை மரியாதையாக வரவேற்றார்கள். டாக்டர் ஒருவர் சேர்ச்சிலை பைத்தியக் காரரின் வாட்டுக்கு அழைத்து வந்து காட்டினார்.
பைத்தியக்காரர்களை பார்வையிட்ட சேர்ச்சில் இங்கே ஆண்களையும், பெண்களையும் ஒரே வாட்டில் வைத்திருக்கிறீர்களே என்று கேட்டார்.
உடனே டாக்டர் நீங்கள் நினைப்பது போன்ற பைத்தியம் இங்குள்ளவர்களிடம் கிடையாது என்றார். சேர்ச்சில் மௌனமாக அடுத்த வாட்டை நோக்கி நடந்தார்.



படிப்பகம்

www.padippakam.com



# மகாத்மாவின் குறும்பு

ஒரு சமயம் ஆச்சிரமத்தில் இருந்த சாமல் என்ற சிறுவனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. கடவுளை எப்படி வணங்குவது தான் என்பது, அவனுக்கு ஏற்பட்ட சந்தேகம். உடனே காந்திக்கு தனது சந்தேகத்தை எழுதி அனுப்பி விட்டான்.

அனைவருக்கும் சேவை செய்வது தான் கடவுளை அடையச் சிறந்த வழி என இரண்டே வார்த்தையில் எழுதி அனுப்பி விட்டார் காந்தி. அதைப் படித்த அச் சிறுவன் காந்திக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினான்.

அதில் பாபுஜி நீங்கள் அடிக்கடி எங்களுக்கு பகவத்கீதைபற்றிக் கூறுகிறீர்கள் அதில் அருச்சுணன் கிருஸ்ணனிடம் ஒரே ஒரு கேள்வி தான் கேட்டான். அதற்கு கிருஸ்ணரோ பக்கம் பக்கமாக பதில் சொல்லி விட்டார்.
நாங்களோ ஒரு முழுப்பக்கக் கேள்வியை கேட்டு எழுதினால் நீங்களோ ஒரு வரியில் பதில் எழுதிவிடுகிறீர்கள், இது நியாயமா? என்று கேட்டு எழுதி இருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அக்காலத்தில் கிருஸ்ணருக்கு ஒரே ஒரு அருச்சுனன் தான் இருந்தான் ஆனால் எனக்கோ உன்னைப்போல் ஏகப்பட்ட அருச்சுனர்கள் இருக்கிறார்கள் அவர்களது கையில் ஏகப்பட்ட கேள்விகள் இருக்கின்றன. அத்தனை கேள்விகளுக்கும் பதில் எழுத எனது உடம்பில் சக்தி இல்லை, அதனால் ஒரே வரியில் பதில் சொல்லி விடுகிறேன். என்று குறும்பாகப் பதில் அனுப்பினார்.

*நான் அனைத்த நூலில் இருந்து......* —குலம்—

# புகழ்

புகழ் என்பது ஒரு கிலோ எடையுள்ளது!
அந்த ஒரு கிலோவில் மாலை கால் கிலோ.
புகைப்படம் கால் கிலோ.
'வாழ்க' முழக்கம் கால் கிலோ.
ஓட்டக்கிராப் கால் கிலோ.
இது சராசரிப் புகழ்.
அந்தப் புகழ் ஏற ஏற முற்றிலும் விசித்திரமான மரியாதைகள் நடக்கும்!
அதிகப்படியான புகழ் பெற்றவர்களிடம் மனிதத்தன்மையே மாறிக் கொண்டுவரும்.
புகழ்.
ஒரு விஞ்ஞானப் பொருள்.
அது உருவத்தையே மாற்றுகின்றது.
தமிழே படிக்காதவன் புகழ் பெற்றுவிட்டால் ஆங்கிலத்தையே பேசத் தலைப்படுகிறான்.
மற்றவர்களைப்பார்த்துத் தான் ஆடை அணிமணிகளை மாற்றிக் கொள்கிறான்.
சாதாரணமனிதன் தெருவில் நின்று எல்லோரையும் பார்க்கிறான்.
புகழ் பெற்ற மனிதனைத் தெருவில் நிற்பவர்கள் எல்லோரும் பார்க்கிறார்கள்.
'புகழ்' என்பது அமைதியின் பகைவன். நிம்மதியின் எதிரி.
குடும்பப் பெண்ணைவிடக் கோரமாக இருந்தாலும் சரி, சினிமாக்காரப் பெண்களை இளைஞர்கள் நாடுவதேன்!



படிப்பகம்

www.padippakam.com

புகழ்....

பிறருடைய அறிவைக் கேட்க வேண்டிய நிலையில் உள்ளவன் பிறருக்கு அறிவுரை. போதிக்கத்துணிவதேன்!

புகழ்.

பணத்தை நன்கொடை கொடுத்து பத்திரிகைக்குச் செய்தியனுப்புவதேன்?

புகழ்.

புகழ்பெற்றவன் முட்டாளாக இருந்தால் புத்திசாலிகளும் அவனுக்கு அடுத்த படிதான். இவை எல்லாம் புகழ் வந்த பின்.

புகழ் எப்படி வருகிறது?

சிலர் வாங்குகிறார்கள்,

சிலர் தாங்கமுடியாமல் தலை கவிழ்கிறார்கள்,

சிலர் தியாகம் செய்து புகழ் பெறுகிறார்கள்,

சிலர் புகழுக்காகத் தியாகம் செய்கிறார்கள்,

சிலர் வள்ளல்களாகிப் புகழ் பெறுகிறார்கள்

சிலர் புகழுக்காக வள்ளல்களாகிறார்கள்.

சிலர் தலைவராகிப் புகழ் பெறுகிறார்கள்.

சிலர் புகழுக்காகத் தலைவராகிறார்கள்.

சிலருடைய தகுதி அவர்களுக்கு புகழ் தேடித் தருகிறது.

சிலருடைய புகழே ஒருவனுக்குத் தகுதியாகி விடுகிறது.

"புகழெனின் உயிரையும் கொடுப்போம்" என்று இனத்துக்கே அதை மரபாக்கி விட்டார். ஒரு புலவர்.

புகழ் கிடைக்கும் என்றால் உயிரை விட்டாகிலும் அதைப் பெறுவாராம்.

உயிரை விட்டுப் புகழ் தேடினால், அந்தப்புகழை நாம் இருந்தா பார்க்கமுடியும்?

அதனால்...

பணத்தைவிட்டு புகழ்தேடுவது நவீன வழக்கமாகி விடுகிறது.

—வளரும்—

—குலம்



படிப்பகம்

www.padippakam.com

# மின்சாரப் பொம்மைகள்

"தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விடாது பார்க்கும் பழக்கமுடைய பெற்றோர், குடும்பத்தை கவனியாமல் விடக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருப்பதால் தொடர்புகள் அறுந்து, செபங்களும் பங்களிப்புகளும் கைவிடப்படுகின்றன.

இப்படியான பெற்றோர் தம்மை மின்சாரப் பொம்மைகளாக மாற்றி விடுகின்றனர்" என இருபத்தியெட்டாவது உலக தினத்தையொட்டி இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வழங்கிய செய்தியில் குறிப்பிடுகின்றார்.

# வீர வன்னிய காவியம்

## தமிழ்தாய் வாழ்த்து

அன்னை தமிழ்தாயை
அகிலத்து ஈஸ்வரியை!
தென்னன் திருமகளை
தெவிட்டாத கனியமுதை
மன்னன் மருக்கொழுந்தை
மங்காத பேரொளியை
இன்னல் கடந்தேற்ற
இனிதே போற்றுகிறேன்!



## வற்றாப்பளை அம்பாள்

வற்றாத அருள் சுரக்கும்
கண்ணகித் தாய்
வற்றாப்பளை ஊரில்
அமர்ந்திருப்பாள்!
பொற்பாதம் கொண்ட
அந்த சிலம்புத் தாயை
பொலிவோடு
அருள் சுரக்க
வேண்டுகின்றேன்.
முற்றாத என் தமிழன்
காவியத்தை
முழுதாகச் செய்வதற்கு
அருள்வாய் தாயே!
கற்றவர்கள் தினம் போற்றும்
கருணைத் தேவே கவியாக
என்பாட்டில் வருவாய் தாயே.

www.padippakam.com

# ஆட்சியின் மாட்சி

பண்டார வன்னியனின்
புகழைப்பாடி
பார் முழுதும் அவன் கீர்த்தி
கேட்கப்பாடி

எந்நாளும் தமிழுக்கு
வாழ்வு தந்த
மன்னவனின் பெரும் புகழைப்
பாடிப் பாடி
தேன் கொண்ட தமிழ்ஈழ
வரலாற்றானை
தெவிட்டாத கவிமலர்கள்
வாழ்த்துச் சொல்லும்!

கூன் கொண்ட தமிழரெல்லாம்
கூனல் நீங்கி
குவலயத்து மன்னருக்கு
வாழ்த்துச் சொல்வர்.

—காத்தான்.

> சுயம்வரம்
> நாவலாசிரியரும்,
> பிரபல நாடக
> இயக்குனரும் நடிகரும்
> ஆகிய கே.எஸ் துரை
> அவர்களின்
> பார்வையில்
> அட்டைப்படம்
> அழகூட்டப்பட்டு
> விடுதலை
> உணர்வோடு கவிஞர்
> அருண் அவர்கள்
> வெளியிட்ட தணலில்
> நின்று என்ற கவிதை
> நூல் விற்பனையாகிக்
> கொண்டிருக்கிறது.
> பெற்றுக் கொள்ள
> விரும்புபவர்கள்
> தொடர்புகொள்ள
> S.Sivam 75 612564

சங்கம் ஆய்ந்ததே
பலகையில் அமர்ந்து
சட்டம் செய்தவன்
தமிழன்!

தங்கம் தோய்ந்த
தமிழரசேற்றி
தரணியில் பெரும்புகழ்
பூத்தான்!

பொஙகியெழுந்து
புயலெனச்சீறி
பொருதிய வெங்களம்
எல்லாம!

அங்கவன் கீர்த்தி
அயலவர் போற்ற
அரசிருந்தே தமிழ்

மன்னவன் ஆட்சி
மக்களின் மாட்சி
வியந்திட ஈழகம்
ஆங்கே
பொன்னிதழ் நாடு
பன் நெடும் நாளாய்
பொலிந்தது
மக்களின் நாடாய்
கண்ணென மன்னன்
வன்னியின் மண்ணை—இன்னல்கள்
தொலைந்திடக் காத்தான்
சண்டைகள் இன்றி
சாதிகள் சாய்த்து
சந்தன மரமென
நின்றான்.

—வளரும்.



படிப்பகம்

www.padippakam.com

# சமையல் பகுதி

**உருளைக் கிழங்குத் துவையல்**
**சமைப்பது எப்படி? (நால்வருக்குத் தேவையானது)**

| | |
|---|---|
| உருளைக் கிழங்கு | அரைக் கிலோ |
| உப்பு | 1 தேக்கரண்டி |
| வெங்காயம் | சிறியது (60 – 80 கிராம்) |
| பச்சை மிளகாய் | 4 |
| தயிர், புளி இல்லாதது | 4 d.l |
| கடுகு | அரைத்தேக்கரண்டி |
| பெருஞ்சீரகம் | அரைத்தேக்கரண்டி |
| கறி மஞ்சள் பொடி | சிறிதளவு |
| செத்தல் மிளகாய் | |
| எண்ணை | இரண்டு தேக்கரண்டி |
| கருவேப்பிலை | |
| இஞ்சி சிறிதளவு | |



உருளைக்கிழங்கைத் தோல் சீவி பின் அவற்றை சிறுதுண்டுகளாக நறுக்கி உப்புச் சேர்த்து குறைந்த நீர் விட்டு அவிய விடவேண்டும். வெங்காயம், பச்சை மிளகாய் இரண்டையும் சிறிதாக வெட்டிவைக்கவும். அவித்த உருளைக்கிழங்கை நீர் வடித்து வைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் எண்ணைவிட்டு சூடேறியதும் கடுகு, பெருஞ்சீரகம் போட்டு பின்பு வெங்காயத்தையும் போட்டு பொன் நிறமானவுடன் கருவேப்பிலை செத்தல் மிளகாய் போட்டு, அவித்து வடித்து வைத்த உருளைக்கிழங்கையும் அதனுள் கொட்டிக் கிளறவும். நெருப்பைக் குறைத்து இஞ்சிச் சாறு, மஞ்சள் பொடி கலந்த தயிரை ஊற்றிக் கிளறி அவற்றைத் திரையாமல் இறக்கி விடவும். உடன் சூடாகவே சோற்றுடனும் மற்றப் பலகார வகைகளுடனும் பரிமாறலாம்.

—உமா

மங்கையர்களே! இது உங்கள் பகுதி, உங்களுக்குத் தெரிந்த சமையற் குறிப்புகளையும், அழகுக் குறிப்புகளையும், இந்தப் பகுதியில் எழுதுங்கள். உங்கள் கருத்துக்களையும், உங்கள் ஆக்கங்களையும் நாம் 'ஆவலோடு எதிர் பார்க்கின்றோம்.'



படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகம்

தென்னங்குருத்தும்
மாவிலையும்
தோரணித்து
அலங்காரம்
புன்னகை
பூக்கிறது.
வாழைக்குலையும்
நுங்குக்குலையும்
இளநீர்குலையும்
ஊரின்
செல்வச்செழிப்பாக...
ஓ...
வெட்டிக் கொண்டுவரப்பட்ட
சோடைத்தென்னைகூட
குலைபோட்டுத்
தறித்த
வாழைமரத்துடன்
அலங்காரவளைவில்
கம்பீரமாக!
அலங்காரப்பந்தல்கள்
அமர்க்களப்படுகின்றன.
ஊர்கள்தோறும்
இதேகாட்சி
ஆனால்...



படிப்பகம்

www.padippakam.com

அந்தக்காட்சி
நிறுத்தும்
கற்பனையை
நுழைவாயிலில்
நிறுத்தப்பட்டுள்ள
கட்சிக்கொடியின்
நிறங்கள்
வேற்றுமைப்படுத்துகின்றன.
அதோ!
மேடைகளில்
சூதாட்ட ஓலங்கள்!
எல்லாம்
அடங்கியபின்
தொண்டர் கூட்டம்
பந்தரைப்பிரித்து
இளநீரை
வாழைப்பழத்தை
நுங்கை
சுவைத்தபின்னால்
அனைத்தையும் அநாதரவாக
விட்டுச்செல்ல...

---

உங்கள் கைவண்ணத்தில் வரைந்த ஓவியங்களை எங்கள் அரும்பு சஞ்சிகைக்கு அனுப்புங்கள் சிறந்த ஓவியமாக இருந்தால் அதற்கான பரிசு ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

அங்கே
நடந்துவந்த
பைத்தியம்
வாழைப்பழத் தோலுக்குள்
சுளைதேட...
தோரணங்கள் சருகுகளாகி
நிலையாமை பேச...
மக்கள்கூட்டம்
மந்தைக்கூட்டமாகி
எவனையோ
தலைவன் என்று
தேர்வுசெய்ய...
அதோ...
ஜனநாயகத்தின் குரல்
மக்களினால்...
மக்களுக்காக...
மக்களால்...
ஓ...
இதை ஒரு ஈழத்துக்கவிஞன்
இப்படியல்லவா கூறிவிட்டான்,
குரங்குகளினால்...
குரங்குகளுக்காக...
குரங்குகளால்...

கவிஞர்.வெற்றிச்செயான்.



படிப்பகம்

www.padippakam.com



# சோதிடமும் மனிதவாழ்வும்

புது வருடப் பிறப்பு

எதிர்வரும் பதின்நான்காம் திகதி காலை டென்மார்க் நேரப்படி 07 மணி 05 நிமிடம் 15 வினாடியளவில் யுவ என்னும் பெயரைக்கொண்ட புது வருடம் பிறக்கிறது.

இன்று உலகத்தில் பெரும்பான்மையான மக்கள் தை மாதம் 1ம்திகதியை புது வருடப்பிறப்பாகக் கொண்டாடும் போது, இந்துக்களாகிய நாம் ஏன் ஆங்கில மாதம் சித்திரையில் வரையறுக்கப்படாத திகதியில் 13 அல்லது 14அல்லது 15 ம் திகதியில் எமது புதுவருடப்பிறப்பைக் கொண்டாடுகிறோம். எம்முடன் பழகும், வேலை செய்யும் டெனிஸ் மக்களும், எமது பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் இதே கேள்வியைக் கேட்கின்றனர்.

பிள்ளைகள் பதிலளிக்க முடியாது விழிக்கிறார்கள். இக் கேள்விக்குப் பதிலைத் தேடி அலைந்து, அலசி ஆராய்ந்து கொண்டு போனால் ஈற்றில் சோதிடத்திலேயே வந்து நிற்க வேண்டியுள்ளது.

காரணம், சோதிடம் தான் இதற்குரிய காரணத்தை தன்னுள் மறைத்து வைத்திருக்கிறது. இந்துக்கள் மத்தியில் மட்டுமல்ல உலகின் பல்வேறு பாகங்களிலும் சோதிடக் கலை தோன்றி வளர்ந்துள்ளது. எந்த நாட்டுச் சோதிடமானாலும் சரி– அது கிரகங்களையும் அக் கிரகங்கள் வலம் வரும் பாதையையுமே மையமாகக் கொண்டுள்ளன. இப் பாதை கல்லுப் போட்டு, மண்போட்டு, தார் ஊற்றி இறுக்கப்பட்ட நம் சாதாரண சாலையைப் போன்றதல்ல, இப் பாதை கண்ணுக்குப் புலப்படாத கற்பனைப் பாதையாகும். இது கிட்டத்தட்ட முட்டையைப் போன்று நீள் வட்டமானதாகும். இதை சோதிடர் 'இராசி மண்டலம்' என அழைக்கிறார். இதைப் பன்னிரண்டாக வகுத்து மேடம் முதலாவதாகவும் மீனம் ஈடாக 12 பெயர்கள் இடப்பட்டுள்ளன. மேடத்தையே எந்தச் சோதிடமும் முதலாவது ராசியாகக் கணித்துள்ளது. இந்த மேட ராசியில் என்று சூரியன் பிரவேசிக்கின்றதோ அன்றய தினத்தையே நாம் புது வருடப்பிறப்பாகக் கருதிக் கொண்டாடுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

சூரியன் இல்லையேல் நாமும் இல்லை, இந்த உலகில் உயிரினங்களும் இல்லை. எனவே தான் எமது மூதாதையர், கடவுளுக்கு அடுத்த படியாக சூரியனை வணங்கி வந்தனர். நாம் வாழும் பூமியும் ஏனைய கிரகங்களும் 'சூரியக்குடும்பம்' என்றே அழைக்கப்படுகின்றது.

இந்துக்களின் வாழ்வில் அவர்களை அறியாமலே சோதிடம் பின்னிப்பிணைந்து கிடக்கின்றது. எமது வருடப் பிறப்பு மாத்திரமல்ல மாதப்பிறப்பும் அவ்வாறே அமைந்துள்ளது. எப்படியெனில் சூரியன் ஒவ்வொரு ராசியிலும் முதல் நாளே எமது அந்தந்த மாதப்பிறப்பாகும். அதாவது சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் போது சித்திரை மாதமும், இடபராசியில் வைகாசி மாதமும், மிதுன ராசியில் ஆனியுமென்று தொடர்கிறது.

எமது நாள் திகதியும் கூட வேறுபட்டதாகும், எந்த நேரம் சூரியன் உதயமாகின்றதோ அந்த நேரத்திலே தான் அன்றைய நாள், திகதி ஆரம்பமாகின்றன. உ+ம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சூரிய உதயம் என்றால் 6 மணிக்குத் தான் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. ஆனால் ஆங்கில முறைப்படி முதல் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கே திங்கட்கிழமை ஆரம்பமாகிவிடும். அது நிட்சயமான ஒரு நேரமாகும். சூரிய உதயம் எந்த நாட்டிலும் காலத்துக்குக் காலம் வேறுபடுவதில்லை. எமது நாள், திகதி ஆகியவை ஒரு நிரந்தரமான நேரத்தில் ஆரம்பமாவதில்லை. அடுத்து தமிழ் கிழமை நாட்களின் பெயரை எடுத்துக் கொண்டால் அவை எல்லாக் கிரகங்களின் பெயரையே கொண்டுள்ளன.
ஞாயிறு–சூரியன்–திங்கள்–சந்திரன்–செவ்வாய்–புதன் என்றவாறு கிரகங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. பார்த்தீர்களா சோதிடம் எவ்வளவு தூரம் எமது வாழ்வில் கலந்துள்ளது என்பதை! எல்லா விதத்திலும் அடிப்படை சூரியன் என்ற காரணத்தினாலேயே எமது மூதாதையர் சூரியனை மதித்து வணங்கி பொங்கிப் படைத்து மதித்து வந்தனர்.

சோதிடம் நாகரீகத்தால் பின்தள்ளப்பட்ட ஆசியாவில் மாத்திரம் உண்டென்று நினைப்பது தவறாகும். இது நாகரீகத்தாலும், விஞ்ஞானத்தாலும் வளர்ச்சியடைந்த ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கூட எத்தனையோ சோதிடர் சாத்திரத்தையே தமது தொழிலாக கொண்டுள்ளனர். எத்தனையோ சோதிடநூல்கள் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இங்கேயும் அன்றாடம் வெளிவரும் பத்திரிகைகளிலும் சோதிடப் பகுதி இருக்கத்தான் செய்கிறது. டெனிஸ் மொழியிலும் பஞ்சாங்கம் வெளிவருகிறது. சோதிடம் கேட்போரும் பார்ப்போரும் இந் நாடுகளில் இல்லை என்றால் எப்படி இந் நாட்டு சோதிடர்கள் அதைத் தொழிலாகச் செய்ய முடியும். வாசகர் மத்தியில் ஆதரவு இல்லை என்றால் ஏன் பிரசுரிக்க வேண்டும்.




படிப்பகம்

www.padippakam.com

நாம் தான் எம்மையும் எமது கலைகளையும் இழிவாக எண்ணுகிறோம். நாகரீக மோகத்தால் விஞ்ஞான பிரமிப்பால் அவற்றில் புதைந்து கிடக்கும் உண்மைகளை அறிய, பயன்படுத்த முற்படுவதில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவில் தோன்றிய பரராச வியாசர் போன்றோரே சோதிடத்தையும் இயற்கை வைத்தியத்தையும் பாடியுள்ளனர். இவை அழியா வரம் பெற்றவை. இன்று ஐரோப்பியர்கள் மேற்கூறினவைகளை மதிக்கின்றனர், கற்கின்றனர். நாம் புறக்கணிக்கின்றோம், காரணம் அவற்றைச் சரியான முறையில் அறிந்து சீர்தூக்கிப் பார்க்காததேயாகும். பழையன புகுதலும் புதியன மறைதலும் சரித்திரம் கண்ட உண்மையாகும். எனவே சோதிடத்திற்கும், இயற்கை வைத்தியத்திற்கும் வரவேற்பு ஏற்படும் என்ற நம்பிக்கையோடும் எமது மக்களுக்கு நான் அறிந்தவற்றைக் கூறுவதன் மூலம் ஒரு சிலராவது பயனடையக்கூடும் என்ற நோக்கோடும் இது நான் ஆற்ற வேண்டிய

கடமையுமென்று கருதி என்னை எழுதத்தூண்டிய அரும்பு ஆசிரியருக்கு நன்றியைக் கூறுவதுடன் எதிர்வரும் யுக புது வருடத்தில் சகலரும் சுபீட்சமாகவும் சுகமாகவும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என்று வேண்டி சகலருக்கும் எனது இதய பூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோதிடர்– சி. பாலசுப்பிரமணியம்




## உலகம்

இந்த உலகம் முகம் பார்க்கும் கண்ணாடியைப் போன்றது. முகம் முழுவதும் கவலையை வரவழைத்துக் கொண்டு சலிப்புடன் பார்த்தால், உலகம் முழுவதும் தீமைகள் நிறைந்திருப்பதைப் போன்று காட்சி தரும்.
நீங்கள் சிரிக்கும் உலகம் தீமைகள் நிறைந்திருப்பதைப் போன்று காட்சி தரும். நீங்கள் சிரிக்கும் போது உலகம் உங்களோடு சேர்ந்து சிரிப்பதைக் காணமுடியும். வாழ்க்கை என்ற பயணத்தில் உலகத்தை உங்களுடைய நண்பர்களாக மாற்றிக் கொள்ளுங்கள்.

–தேக்கரே



படிப்பகம்

www.padippakam.com

# கவிதைக்கனவுகள்

விமர்சனம்



**கவிவேழம் பாரதிபாலன் அவர்களது கவிதைக்கனவுகள் என்ற நூலுக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வெ. தெ. மாணிக்கம். எம். ஏ.பி. எச். டி. அவர்கள் வழங்கிய விமர்சனம்.**

கவிஞர் பாரதிபாலன் யாத்துள்ள 'கவிதைக் கனவுகள்' என்னும் கவிதைத் தொகுப்பைப் படித்தேன். தரமான கவிஞர் என்பதற்குரிய தடயங்கள் அவரது கவிதைகளில் காணப்படுகின்றன.

உள்ளத்துள்ளதும் உணர்ந்துரைப்பதும் தெள்ளு தமிழில் தெளிந்துரைப்பதும் கவிதை எனக் கருத்துரைப்பர் கவிமணி. அப் பண்புகள் முழுவதையும் இந் நூலில் பார்க்கிறேன்.

உணர்ச்சியும் ஓட்டமும் கொண்டு கருத்தைச் சுமந்து வரும் கவிதைகள் பல இதில் உள்ளன.

கவிஞனுக்கே உரிய உள்ளத்துறுதியும் நல்லெண்ணப் போக்கும் அறக் கோட்பாட்டுணர்வும் ஆங்காங்கே பொதிந்துள்ளன. மக்களுக்காக எழுதப்படும் கவிதை மக்களுக்கே சென்று சேர வேண்டும். கவிதையில் அதற்குரிய கருவியாக எளிமைப் பண்பினை தேர்ந்துள்ளார் கவிஞர். எளிமையும் இனிமையும் களி நடம் புரிவனவாய்க் கவிதைகள் திகழ்கின்றன. எளிமை, கவிதையழகு ஆகியன தமிழ்த்தாயை வாழ்த்தும் போதே அரும்பி விடுவதை முதற் கவிதையில் காண்கிறேன்.

"எந்தன் காதல் பெருமூச்சில்
ஏழைக்குடிசைத் தாலாட்டில்
சிந்தும் தமிழைக் காண்கின்றேன்
சிந்தை குளிரச் சிரிக்கின்றேன்."

(தமிழ் வாழ்த்து)

என்ற அடிகள் கவிதையின் எளிமையையும் இனிமையையும் வெளிப்படுத்துகின்றன: தமிழும், சைவமும் ஈழப் பெருமக்கள் வாழ்வில் கலந்து மணப்பதாகும். இந்த கவிஞர் வெளிப்படுத்திய சமய உணர்வு, அறவழி நின்று அழகூட்டுகிறது. திருக்கோணமலையில் அமர்ந்துள்ள அருள் மிகு கோணேசரை அகங்குளிரப் பாடுகிறார்.



படிப்பகம்

"திண்ணிய தெய்வத்தோற்ற
திருமுறை நிலைத்தே வாழும்
கண்ணிலா நீசர் கூடிக்
கட்டிடம் அழிந்திட்டாலும்
புண்ணியம் ஒன்று கூடி
புதிதென முளைத்துப் பூக்கும்." பக்.6

எனக் கூறும் போது மண்ணில் நிலை பேறுடைய இறைச் சிந்தனைக்கு அழிவில்லை என்பதையும் இறைவன் ஆக்க காரணன் என்பதையும் அறிகிறோம். திருக்கோணாமலையின் சிறப்பினை கருத்தாழம் மிக்க கவின் பெறு அடிகளால்

"சைவமுடன் தமிழ் வளரும் தெய்வக் குன்றம்." பக். 14
"ஞான வழி பெறுவதற்கு நல்லோர் குன்றம்." பக்15

என அழகுறக் குறித்துள்ளார்.

இறைச் சிந்தனையை ஊட்டுவதோடு இன்றைய ஈழம் எந்நிலை அடையவேண்டும். அங்குள்ள தமிழர் எங்ஙனம் வாழவேண்டும் என்பதையும் கவிதையில் எடுத்துக் கூறியுள்ளார். இல்லாத ஒருமைப்பாடு என்னும் கவிதையில் ஈழத் தமிழரின் ஒற்றுமையை வற்புறுத்தியுள்ளார்.

அதிரடிப்படை என்னும் கவிதையில் ஈழம் வாழ் தமிழர் படும் கொடுமைதனைக் காட்சி படச் சித்தரித்துள்ளார். அதிரடிப்படை தாக்க வருகிறது வீட்டினுள் புகுந்து கதவு தட்டப் படுகிறது. சுகத் தென்றலை மறந்து போனவராய் தமிழர் உள் வீடுகளில்! இக் காட்சி அவலமும் அச்சமும் நிறைந்ததாய் உணர்ச்சிபட விரிகிறது.

"அமைதி இரா அவலமுற ஓசை கூட்டும்
அடுக்களையும் அகாலத்தே
விழித்துக் கொள்ளும்!" பக். 45

என்று குறிப்பிடும் கவிஞர், படைகள் எந்த நேரத்திலும் கன்னி வேட்டை ஆடும் நிகழ்ச்சியை எடுத்துக் கூறத் தவறவில்லை.

"இளவட்டம் கிடைக்காதா
என்றே நோக்கும்" பக்.45

என்று சுட்டிக் காட்டுவது நம் மனதைச் சுடுகிறது. அந்தப் பொழுது விடிகிறது. எப்படி? காலை சோகமாக! அக் காலைச்சோகம் நொந்து கொள்கிறது. எதனை? இதனைக் கவிஞர்.

"சுமை நிறைந்த இரவகலக் காலைச் சோகம்
சுதந்திரமே இல்லாத தமிழை நோகும்." பக். 45

எனக் காட்டியுள்ளார். பெருமூச்சு என்ற கவிதை, கவிஞரது உள்ளத்தைப் படம் பிடிக்கிறது. கவிஞருக்கு திண்ணிய நெஞ்சம் வேண்டும். அச் சிந்தனையை வடிக்கிறது இப் பாடல்:

www.padippakam.com

"உயர் சந்தக் கவிதை சரமாய் தொடுக்க
தமிழே உவக்க வேண்டும்"

எனத் தன் விழைவைக் கூறும் கவிஞர் தன் பாட்டு, பாரம் சுமக்கும் பாட்டாளிக்கு(ப்) பல்லாக்காக வேண்டும். (பக். 17)

என்ற பயன் பாட்டையும் பக்குவமாய்த் தெரிவித்து விடுகிறார். என் கவிதைக் காற்றினிலோர் சுகந்தம் வீசும் (பக். 1)

என்ற உணர்வை விதைக்கும் கவிஞர் "என் கதையும் ஒரு நாள் கலக்கம் இன்றி(த்) களத்தில் உரிமை தேடும்." (பக். 18) என்ற அடிகளால் தனக்குள்ள முன்னேற்ற உழைப்பையும், முனைப்பையும் வெளியிட்டு ள்ளார்.

இவற்றின் வெளிப்பாடாக நல்லெண்ணச் சிந்தனையை விளக்குமிடத்து "உண்மை நாற்றினை நட்டுப் பாரேன் நலன் பல காண்பாய் திண்ணம்." (பக். 23) எனக்குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும் மேலே கூறிய அடிப்படையில் தான் கவிஞரின் சீரிய சிந்தனை வளர்ச்சியுற்று முன்னேற்றம் அடைகிறது. என்பதை "தார்மீகம் மலர்கிறது" என்ற கவிதையில் அறிய முடிகிறது.

"தெய்வீக உணர்வெம்மை அழைக்கின்றது
வருங்காலம் நமதென்று உரைக்கின்றது –நல்
வரலாறு நம் கையில் தருகின்றது." பக். 88

என்பதனைச் சிந்திப்பது நல்லுணர்வின் வெளிப்பாடே.

சந்த நயம் சிந்த பாடியதற்கு பெருமூச்சு (பக். 17) ஊர் இழப்பு (பக். 70) தெளிவு (பக். 76) ஓடத்தை ஏரென்று (பக். 86)

ஆகிய பாடல்கள் சான்று. கற்பனை, கருத்து, நலம், உணர்ச்சி ஆகிய மூன்றும் சிறுபிள்ளை வேளாண்மை (80) என்ற கவிதையில் மும் மணிகளாக ஒளிர்வதைக் காணலாம். மணல் வீடுகட்டி அப்பா, அம்மா விளையாட்டு விளையாடிய மழலைகளின் பார்வையில் பாடல் அமைந்துள்ளது.

"கடல் சிப்பி ஒற்றையெம் கலமாக்கினோம் –அதில்
கல்லையும் நீரையும் சோறாக்கினோம்.
உணவுண்ட களைதீர இளைப்பாறினோம். இந்த உலகத்தில்
இல்லாத சுகமாகினோம்.!" (பக். 80)

என்று கூடி மகிழ்ந்த வேளையில்!" எங்கள் விளையாட்டுக் கலியாணம் வீணானதோ என்ற சோக அலை வீசி கவிநெஞ்சையும் கரையச்செய்கிறது.

கவிஞர் பாரதிபாலன் ஈழம் தந்த கவிவேழம். கவிதைகளை செறிவோடும் சீரிய எண்ணத்தோடும் படைத்தளித்துள்ள அவர், நாட்டு நலம் கருதும் பண்பாளராக விளங்கு கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

சமூக நலம் போற்றும் சமூகச் சார்பாளராகத் திகழ்கிறார். விடுதலை உணர்விற்கு உரிமைப் பா இசைக்கிறார். இவற்றிற்கான அடையாளச் சின்னங்களே இவரது கவிதைகள்.

டாக்டர் வெ. தெ. மாணிக்கம்

## உலர்ந்த நெருப்புக்குச்சி

ஈரமான நெருப்புக் குச்சியை எவ்வளவு பலமாகத் தேய்த்தாலும் தீப்பற்றுவதில்லை. உலர்ந்த நெருப்புக்குச்சியோ மெதுவாகத் தேய்த்தவுடன் தீப்பற்றிக் கொள்கிறது.

உண்மையான பக்தனின் மனம் உலர்ந்த நெருப்புக்குச்சிக்குச் சமம். கடவுள் பெயரைக் கேட்டதுமே அவன் மனதில் பக்தி ஊற்றெடுக்கிறது. ஆனால் காமத்திலும் பணத்தாசையிலும் மூழ்கிக் கிடப்பவனின் மனம் ஈர நெருப்புக் குச்சியைப் போன்றது. எவ்வளவு முறை கடவுளைப் பற்றி உபதேசித்தாலும் பக்தி என்ற நெருப்பு அவன் மனதில் மூண்டெழுவதில்லை.

–இராம கிருஸ்ண பராமாச்சாரியார்

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட போது பிரிட்டனின் பிரதமராக இருந்த வின்சன் சர்ச்சில் இந்தியப் பிரதமர் நேருவுக்கு ஒரு தந்தி கொடுத்தார். நாற்பது ஆண்டு காலமாக எங்களின் நேரடி விரோதியாக இருந்த காந்தியைக் நாம் கொல்ல நினைத்ததில்லை. சுதந்திரம் பெற்ற இரண்டே ஆண்டுகளில் உங்கள் நாட்டு மதவெறி கொன்று விட்டதே!

என்–



படிப்பகம்

www.padippakam.com

# நட்பின் உயர்வு

வெகு காலத்திற்கு முன் சிசிலி நாட்டை யோனசஸ் என்ற அரசன் ஆண்டுவந்தான். ஒரு முறை அவன் பிதியாஸ் என்பவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தான்.

அரசே! நான் செய்த தவறுக்குத்தான் எனக்குக் கொலைத் தண்டனை விதித்தீர்கள். ஒரே ஒரு மாதம் அவகாசம் தாருங்கள் நான் எனது ஊருக்குச் சென்று எனது மனைவி பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டுத் திரும்புகிறேன். என்று மண்டாடினான் பிதியாஸ்.

“நீ திரும்புவாய் என்பதற்கு என்ன உறுதிமொழி? உனக்குப் பிணையாக இருக்க யாராவது முன் வந்தால் உன்னை அனுப்புகிறேன்“ என்றான் அரசன்.

பிதியாசின் நண்பன் டாமன் என்பவன் அரசனின் முன்வந்து “அரசே என் நண்பனுக்காக நான் பிணை ஏற்கிறேன்” என்றான். அவன் குறித்த காலத்திற்குள் வரவில்லை என்றால் நீ உயிர் இழக்க வேண்டும், சம்மதம் தானே! எனக் கேட்டான் அரசன். சம்மதம் தெரிவித்தான் டாமன், பிதியாஸ் தன் ஊருக்குப் புறப்பட்டான். ஒரு மாத தவணை முடிந்தது ஆனால் பிதியாஸ் வரவில்லை. எல்லோரும் டாமனுக்காக இரக்கப்பட்டார்கள். குறித்த நாள் மாலை டாமனை தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். கயிற்றை கழுத்தில் மாட்டும் நேரம் சாலையின் சிறிது தொலைவில் புழுதி எழுவதைக் கண்ட அரசன் யாரோ குதிரையில் வருகின்றனர், சிறிது நேரம் தூக்குத் தண்டனையை நிறுத்தி வையுங்கள் எனக் கட்டளையிட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

குதிரையிலிருந்து விரைவாக இறங்கி வந்த பிதியாஸ் "எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள் வழியில் ஏற்பட்ட சூறாவளியால் நானும் குதிரையும் சிக்கிக் கொண்டோம். அதனால் காலதாமதமாகி விட்டது. எப்படியோ நேரத்திற்கு வந்து சேர்ந்து என் நண்பனைக் காப்பாற்றி விட்டேன். இனி என்னைத் தூக்கிலிடுங்கள்" என்றான். உண்மை நட்பு என்றால் என்ன என்று இன்று தான் நான் புரிந்து கொண்டேன், என் வாழ் நாள் முழுவதும் நீங்கள் இருவரும் என் நண்பர்களாக இருக்க வேண்டும். என்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

## கடவுளுக்கு

மனிதன்
பயங்கரமானவன்
அவனது கண்கள்
அகலமானவை
விட்டால் வானத்தின்
எல்லைக்
கோடுகளை விரித்து
கடவுளின்
சொர்க்கத்தையே
பிடித்து
விடுவான்.
கவனம்
கடவுளே!
மனிதன்
அதோ
வருகிறான்.



படிப்பகம்

www.padippakam.com



# கண்ணன் தடுமாறிய நேரம்

மகாவிஷ்ணு இரண்டு அவதாரங்களில் சிறிது தடுமாறினாராம். பாண்டவர்களுக்காக தூது நடந்த போது இவரின் உணர்ச்சிகளையும் கேட்டுக் கொண்டு வருகிறார். அப்போது சகாதேவன் தன்னுடைய அன்பு என்கிற கயிற்றினால் கட்டி, கண்ணனிடமே எல்லாம் உனக்குத் தெரியும் அப்படியும் எங்களை எதற்குக் கேட்கிறாய் என்ற போது அந்த அன்புக் கயிற்றினால் விடுபட முடியாமல் தவிர்த்தாராம் கண்ணன்.

அதே போல, நரசிம்ம அவதாரத்தின்போது பிரகலாதன் தன் தந்தையிடம் "நாராயணன் எங்குமிருக்கிறார்; தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார், உன்னிலும் இருக்கிறார் என்னிலும் இருக்கிறார்", என்று கூறினார். அப்போது தான் கண்ணன் சிறிது தடுமாறுகிறார். பிரகலாதனின் வாக்கை நிரூபிப்பதற்காகத் தூணையோ, துரும்பையோ, இரணிய கசிபுவையோ பிளந்தால் இருந்து விடலாம், ஆனால் அவர் என்னுள்ளும் இருப்பாரா? என்று சந்தேகித்துத் தன்னுடைய இதயத்தைப் பிளந்தால் அப்போது அந்த அசுரனாகிய கெட்டவனிடமும் இருக்க வேண்டுமே, என்று எண்ணித் தடுமாறினாராம்.



படிப்பகம்

www.padippakam.com

பாலர் உலகம்

பிள்ளைகளே! இலங்கை எங்கள் நாடு!
உங்கள் அப்பா அம்மா பாட்டி ஆகியோர் டென்மார்க்கில் பிறக்கவில்லை. இதனை நீங்கள் அறிவீர்கள், நாங்கள் எங்கள் தாய் நாட்டில் நடைபெறும்– போர்க்காலச் சூழ்நிலையால் தான் இந்த ஜரோப்பிய நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த ஜரோப்பிய நாடு எமக்கு நிரந்தரமான நாடு அல்ல. இந்த நாட்டின் பண்பாடுகள் நமது நாட்டின் பண்பாட்டில் இருந்து வேறுபட்டவை. எதிர்காலத்தில் எமது நாட்டின் தலைவர்களாக வரவேண்டிய நீங்கள் எமது கலாச்சாரத்தை அறிவது அவசியம். ஊரில் உங்கள் அப்பா, அம்மா முன்பு கண்ட இப் பாலர் உலகத்தைக் காண உங்களையும் அன்போடு அழைத்துச் செல்கிறோம்.





படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மொழி வாழ்த்து

தானத் தனத்தன தானத் தனத்தனதானத் தனத்த
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ் மொழிவாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அளந்த தனைத்தும் அறிந்திடும்
வளர் மொழி வாழியவே!



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பாடலைப் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார். இவர் குழந்தைகளுக்காகவும், பெரியவர்களுக்காகவும் நல்ல பல பாடல்களைப் பாடியிருக்கிறார். பிள்ளைகளே உங்கள் அப்பா, அம்மா இவர்களின் உதவியோடு இப்பாடலைப் பாடிப் பாருங்கள்.





## திருக்குறள்

அகர முதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு

விளக்க உரை: எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அது போல் உலகம் ஆதிபகவனை முதலாகக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

கற்றதனால் ஆயபயன் என் கொல் வாலறிவன்
நற்றார் தொழார் எனின்

விளக்க உரை: இறைவன் திருவடியை வணங்கவில்லையானால்
கற்ற கல்வியினால் பயன்யாது?

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

விளக்க உரை: மனமாகிய மலரில் வீற்றிருக்கும் இறைவன் அடியைச் சேர்ந்தவர்கள் இவ்வுலகில் நன்கு வாழ்வார்கள்.

## பெரிய புராணக் கதைகள்

### அதிபத்தர்

சோழவழ நாட்டில் அதிபத்தர் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் மீனவர்களுக்குத் தலைவராகி அவர்கள் வலை வீசிப் பிடிக்கும் மீன்களைப் பெற்று வாழ்பவர்.
மீன்களைப்பிடிக்கும் போது முதன் முறை பிடிக்கும் மீனை "சிவபெருமானுக்கு என்று" கடலில் விடுவதே அவரது திருத் தொண்டாகும்.




படிப்பகம்

www.padippakam.com

## இறைவன் சோதனை

சிவபெருமான் அன்பரைச் சோதிக்க திருவேழங் கொண்டார். அந்த மீனவ அன்பருடைய வலையில் ஒரு நாள் ஒரு மீன் மாத்திரமே படும்படி செய்தார். அதனையும் அன்பர் கடலில் விட்டார். இங்ஙனம் பல நாட்களாக அவரும் சுற்றத்தாரும் பட்டினி கிடந்தார்கள்.



## அற்புத மீன்

ஒரு நாள் அற்புதமான ஒரு மீன் வலையில் அகப்பட்டது. நவமணிகளையும் வயிற்றினூடாக பொதிந்து அந்த மீன் பேரொழியுடன் திகழ்ந்தது. விலை மதிக்க முடியாத அம் மீனையும் அவர் தயக்கம் இன்றி கடலில் விட்டார். அப்போது தேவர்கள் மலர் மாரி சொரிந்தார்கள். பஞ்ச நாதங்களும் ஆர்த்தன. இறைவன் காட்சி கொடுத்து நாயனாரை ஆட்கொண்டார்.

அவர் சிவலோகம் சென்று இனிதே வாழ்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## சிங்கமும் பசுமாடுகளும்

முன்னொரு காலத்தில் ஒரு பெரிய காட்டில் நான்கு பசு மாடுகள் வசித்து வந்தன. ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவைகள் மேய்வது வழக்கம்.

ஒரு நாள் ஒரு சிங்கம் அந்த வழியாகப் போயிற்று, அது பசு மாடுகளைக் கண்டது. பசு மாடுகள் சிங்கத்தைக் கண்ட பொழுது எல்லாம் சேர்ந்து சிங்கத்தை எதிர்த்துச் சண்டையிட்டன. சிங்கம் ஓடி விட்டது.

சில நாட்கள் கழித்து அந்தப் பசுக்கள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டன. தனித் தனியாக வேறு இடத்தில் மேயத் தொடங்கின. சிங்கம் அங்கே வந்து ஒவ்வொன்றாகக் கொன்று சாப்பிட்டுவிட்டது.

"ஒற்றுமையே பலமாகும்"

## இறைவனை அடையாதவர்

அடுத்தவர் மதித்து மயங்கிட ஆசைப்படுவது, அடிக்கடி பொய் உரைகளை புனைந்து பேசுவது, எனக்கு நிகர் எவரும் இல்லை என அகந்தையுடன் வாழ்வது, தருபவர்களை உபசரிப்பது, தராதவர்களை இகழ்வது, நடுநிலை தவறுவது ஆகிய நடத்தை உடையோர் இறைவனை அடையார்.

வள்ளுவர்.



படிப்பகம்

www.padippakam.com

## வெற்றிக்கு சிலவழிகள்

உங்கள் எதிர்காலபலனை அறிந்து செயற்படுங்கள்!!
உங்கள் சாதகப்படி சாதகமான காலங்களில், உங்களுக்கு பொருத்தமான சுபநேரங்களில் வீட்டை வாங்குங்கள்! வியாபாரத்தை ஆரம்பியுங்கள்! துணிந்து முதலீடு செய்யுங்கள்! புதிய முயற்ச்சிகளை செய்யுங்கள்! வெற்றி நிச்சயம்!!!

பாதகமான காலங்களில்: எந்த ஒரு முதலீட்டையும் செய்யாதீர்கள்! கடன் கொடாதீர்கள்! கூடியவரை பிரயாணத்தை தவீருங்கள்! வாய்க்கு பூட்டு போடுங்கள்! வீண் வாக்குவாதம் செய்யாதீர்கள்!! கூடாதகாலங்களில் எடுக்கும் முயற்ச்சிகள் எல்லாம் தோல்வியை அல்லது தடைகளைத்தரும். வீண்பகை உண்டாகும். உங்களுக்கு,

சாதகமான காலம் எது?

பாதகமான காலம் எது?

என்பதை அறிய டென்மார்க் சோதிடர்

சி.பாலசுப்பிரமணியத்தை நாடுங்கள்!

ஐரோப்பிய நாடுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு சாதகம் கணிப்பதற்கு இலங்கையிலுள்ள எல்லா சோதிடர்களும் கற்றுக்கொள்ளவில்லை. இலங்கைப் பஞ்சாங்கம் இலங்கைக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் மாத்திரமே பொருந்தும். ஆகவே ஐரோப்பிய நாடுகளுக்கோ அல்லது உலகின் வேறு எந்தவொரு நாட்டிற்கோ Ephemeris முறைப்படி கணிப்பதுதான் மிகவும் சரியானதாகும் என்பதையும் அறிய தருகிறேன்.

சாதகம் கணிப்பதற்கும்.

எதிர்கால பலனை அறிவதற்கும்.

கல்யாணத்திற்கோ அல்லது வீடு குடிபுகுவற்கோ

சுபநேரம் கணிப்பதற்கும், தொடர்பு கொள்ளுங்கள்.

**S.BALASUBRAMANIAM**

**ASTROLOGER**

**SPROTOFTEN 12,2.TH**

**5800 NYBORG. DANMARK.**

**TELEPHONE: 65 317539**

உங்கள் நண்பரையும் இதை வாசிக்கக்கொடுப்பதன் மூலம் பயனடையச்செய்யுங்கள்!



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்